**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், ஏற்காடு.**
**முன்னிலை – திரு. இரா. இளஞ்செழியன், பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஏற்காடு.**
**2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 27–ம் நாள் திங்கட்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 17/2025**
**(CNR.NO.TNSA21–000103–2025)**

புகார்தாரர் – அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஏற்காடு காவல் நிலையம்,
**கு.எண். 75/2025**

எதிரி – அண்ணாமலை த/பெ. மொய்யகவுண்டர் (59)
பிளியூர், ஏற்காடு தாலுக்கா,
சேலம் மாவட்டம்.

குற்றம் – U/s. 329 (3), 296(b), 351 (3), 118 (2) BNS.

தீர்வு – முடிவாக, எதிரியின் மீது ச/பி 329 (3), 296(b), 351 (3), 118 (2) BNS–ன் கீழ் அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால், எதிரி குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து **பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 271(1)–ன் கீழ்** எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

இவ்வழக்கானது கடந்த 02.06.2025–ம் தேதி கோப்பிற்கு

எடுக்கப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை (1) அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.S. ரமேஷ், அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் படி தாக்கல் செய்ததன் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

<table>
<tr><th>வ. எண்.</th><th>விளக்கம்</th><th colspan="6">விபரங்கள்</th></tr>
<tr><td>1</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="6">14.03.2025</td></tr>
<tr><td>2</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="6">14.03.2025</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td colspan="3">கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td colspan="3">14.03.2025</td><td colspan="3">19.03.2025<br>(Court Bail)</td></tr>
<tr><td>4</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="6">02.06.2025</td></tr>
<tr><td>5</td><td>கு.வி.மு.ச. பிரிவு.281–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="6">12.08.2025</td></tr>
<tr><td>6</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="6">C.M.P. No.524 of 2026 – Allowed – 24.06.2026.<br>C.M.P. No.55 of 2025 – Allowed – 19.03.2025.</td></tr>
<tr><td rowspan="2">7</td><td rowspan="2">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">சாட்சிகள்</td><td colspan="2">முதல் விசாரணை</td><td colspan="2">குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td colspan="2">அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3<br>அ.சா.4<br>அ.சா.5<br>அ.சா.6</td><td colspan="2">08.09.2025<br>08.09.2025<br>08.09.2025<br>08.09.2025<br>12.03.2026<br>11.05.2026</td><td colspan="2">15.07.2025<br>--<br>08.09.2025<br>08.09.2025<br>12.03.2026<br>11.05.2026</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 8 | எதிரியிடம் குற்றம் குறித்து BNSS பிரிவு 351(1) (ஆ)ன் கீழ் வினவிய நாள் | 13.05.2026 | |
| 9 | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் |
| | | -- | -- |
| 10 | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 27.07.2026 | |
| 11 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 27.07.2026 | |

**Judicial Form No:61**

**Complainant** : Inspector of Police, Yercaud Police station

**Accused** : அண்ணாமலை த/பெ மொய்யகவுண்டர் (59)

**Offence** : **U/s. 329 (3), 296(b), 351 (3), 118 (2) BNS.**

**Finding** : **Accused Found Not Guilty.**

**Sentence** : முடிவாக, எதிரியின் மீது ச/பி 329 (3), 296(b), 351 (3), 118 (2) BNS-ன் கீழ் அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால், எதிரி குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து **பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 271(1)-ன்** கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**Property** : **C.P. No. 11/2025**

**1). கத்தி**

| S.No | Name | Father's/Husband Name | Caste or race | Occupation | Residence | Age |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | அண்ணாமலை | மொய்யகவுண்டர் | -- | -- | பிளியூர், ஏற்காடு தாலுக்கா, சேலம் மாவட்டம். | 59 |

| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commencement of trial | Close of Trial | Sentence or order | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|

| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
|---|---|---|---|---|---|---|---|
| 14.03.2025 | 14.03.2025 | 14.03.2025 | 19.03.2025 (Court Bail) | 12.08.2025 | 13.05.2026 | 27.07.2026 | 27.07.2026 |

2) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்–</u>

கடந்த 14.03.2025–ம் தேதி காலை 07.00 மணியளவில் எதிரியாகிய நீர் HONEY ROCK ESTATE எஸ்டேட்டில் உள்ள எரியின் அருகில் அத்துமீறி நுழைந்தும், புகார்தாரரை பார்த்து ஏண்டா தேவிடியா மகனே கண்டார ஓலி பையனே என்று பொது இடத்தில் ஆபாச வார்த்தையால் திட்டியும், கையில் வைத்திருந்த கொடுவாளால் வெட்டிய போது புகார்தாரர் இடது ஆள் காட்டி விரலிலும், நடுவிரலிலும் கொடுங்காயம் ஏற்படுத்தியும், புகார்தாரர் தன் கையில் வைத்திருந்த கொடுவாளை காட்டி வாதியை பார்த்து எத்தனை நாளைக்கிடா என்கிட்ட இருந்து தப்பிப்ப எப்படியும் உள்ளோட சாவு என் கையில்தாண்டா இதே கொடுவாளாளே உன் கதையை சீக்கரமா முடிச்சிடுரேன்டா என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றச்செயலுக்காக உம்மீது சட்டப்பிரிவு 329**(3), 296(b), 351(3). 118(2) BNS–ன்** படி ஏற்காடு சிறப்பு காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS Act–ன் படி

எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரி மீது **U/s.** 329**(3), 296(b), 351(3). 118(2) BNS–ன்.** கீழ் குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்து கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

4) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், அ.சா.பொ.1 சான்று பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்–</u>**

**அ.சா.1 குப்புசாமி** தனது சாட்சியத்தில் சுமார் 5 மாதங்களுக்கு முன்பு காலை 06.30 மணிக்கு ஆஜர் எதிரி எஸ்டேட்டிற்கு புல் அருக்க வந்தார் என்றும், ஏன் இங்கு புல் அருக்கிறீர்கள் என்று கேட்டேன் அதற்கு ஆஜர் எதிரி தான் அப்படி தாண்டா செய்வேன் உன்னால முடிஞ்சத பாத்துக்கோ பின்னர் அங்கு இருந்த பிரதரிடம் சொல்ல செல்ல முயன்றபோது ஆஜர் எதிரி கையால் இடது பக்கம் கன்னத்தில் அடித்தார் என்றும், தான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன் அப்போது தனது கையில் இருந்த கத்தியை பிடிங்கி கழுத்தில் வெட்ட வந்தார் அப்போது அதை தடுத்ததால் தனது இடது கையில் ஆட்காட்டி

விரலில் வெட்டினார் என்றும், ஆனால் தனது கையில் அதிக, இரத்தம் வந்த காரணத்தினால் பிரதர் தன்னை ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் என்றும், அங்கிருந்த மருத்துவர்கள் தன்னை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் என்றும், பின்னர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 2 வாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றும், சேலத்திலும் முறையான சிகிச்சை இல்லாத காரணத்தினால் தனது பெரிய மகள் வீடான திருப்பூரிற்கு சென்று விட்டேன் என்றும், அங்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், போலீசார் தன்னை ஏற்காடு அரசு மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதிலுள்ள விவரங்கள் தனக்கு தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் கத்தியால் தான் ஆஜர் எதிரி தன்னை வெட்டினார் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6). **அ.சா.2 சரண்ராஜ்** தனது சாட்சியத்தில் சுமார் 5–6 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 07.00 மணிக்கு எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்றேன் என்றும், அப்போது அ.சா.1 குப்புசாமி இடது கையில் இரத்தம் வழிந்தபடி அங்கிருந்த பங்களாவிற்கு வந்தார் என்றும், அப்போது என்ன நடந்தது என்று கேட்டேன் அதற்கு அவர் ஆஜர் எதிரி அண்ணாமலை கையில் வெட்டி

விட்டதாக சொன்னார் என்றும், பின்னர் எஸ்டேட் ஜீப்பில் தானும், ஓட்டுநர் பட்டியல் சாட்சி–3 அருண்பால் சுந்தரம் ஆகியோரும் ஏற்காடு அரசு மருத்துவமனையில் அ.சா.1–ஐ சிகிச்சைக்காக அனுமதித்தோம் என்றும், பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்தவமனைக்கு பட்டியல் சாட்சி–3–ம், பிரதர் பெண்ணடிக்ட் ஆகியோரும் அழைத்துச்சென்றனர் என்றும், பின்னர் தான் எஸ்டேட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7). **அ.சா.3 பழனி** தனது சாட்சியத்தில் ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்பதால் தெரியும் என்றும், தான் தினசரி எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்று வருவேன் என்றும், சுமார் 4–5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் போலீசார் எஸ்டேட்டில் அ.சா.1–ற்கும் மற்றும் ஆஜர் எதிரிக்கு சண்டை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள் அதைபற்றி தெரியாது என்றும், பின்னர் தங்களிடம் கையெழுத்து பெற்றனர் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8). **அ.சா.4 ரவி** தனது சாட்சியத்தில் சுமார் 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் ஆஜர் எதிரிக்கும், அ.சா.1 குப்புசாமிக்கும் இடையே ஏற்பட்ட சண்டை

குறித்து விசாரிக்க போலீசார் எஸ்டேட்டிற்கு வந்தனர் என்றும், அங்கு பணியில் இருந்த தன்னிடம் சம்பவ நடந்த இடத்தை காண்பிக்க சொன்னார்கள் என்றும், அங்கு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் தான் கையெழுத்து கேட்டார்கள், தான் கையெழுத்து செய்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் வரைபடம் தான் வரைந்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள்.

9). **அ.சா.5 மேகலா** தனது சாட்சியத்தில் தற்போது தான் தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகின்றேன் என்றும், கடந்த 14.03.2025–ம் தேதி காலை 07.45 மணிக்கு தான் மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது குப்புசாமி த/பெ. அருணாசலம் என்பவரை ஓட்டுநராக பணிபுரியக்கூடிய அருள் பாலசுந்தரம் என்பவர் அழைத்து வந்தார் என்றும், தான் குப்புசாமி த/பெ. அருணாசலம் என்பவர் தனக்கு தெரிந்த ஒரு நபர் கத்தியால் வெட்டியதாக கூறினார் என்றும், தான் அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் கண்டறியப்பட்டன என்றும், காயம் 1 இடது கையில் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் ஆழமாக வெட்டுக்காயம் மற்றும் இரத்தக்கசிவு இருந்தது என்றும், மேற்படி இரத்தக்கசிவிற்கு மட்டும் முதலுதவி சிகிச்சை அளித்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும்,

அங்கு அவருக்கு வழங்கயி கருத்துரைப்படி அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயம் என சான்றிழக்கப்பட்டது என்றும், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10). **அ.சா.6 முருகன்** தனது சாட்சியத்தில் கடந்த 14.03.2025–ம் தேதியன்று சுமார் 08.00 மணிக்கு நிலைய அலுவலலில் இருந்தபோது ஏற்காடு அரசு மருத்துவமனையிலிருந்து தாக்குதல் குறித்த தகவலின் படி அரசு மருத்துவமனை சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த குப்புசாமியிடம் வாக்குமூலம் பெற்று புகார் சம்மந்தமாக நிலைய குற்ற எண்.25/2025, U/s. 329(3), 296(b), 118(1), 351(3) BNS Act–ன் வழக்கு பதிவு செய்தேன் என்றும், பின்னர் அசல் நகலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றும், பின்னர் சம்பவ இடத்தில் கொடுவாள் ஒன்று கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன் என்றும், மேற்படி வழக்கு சொத்தினை படிவம் 91–ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தேன் என்றும், பின்னர் காயமடைந்த நபரை பரிசோதனை செய்த மருத்துவர் வழங்கிய அ.சா.ஆ.6–ன் அடிப்படையில்

வழக்கின் ச/பி. 329(3), 296(b), 118(1), 351(3)–லிருந்து 329(3), 296(b), 118(2), 351(3) ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், பின்னர் எதிரியின் மீது கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11). இந்நிலையில் எதிரிக்கு பாதகமான அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து Sec.351(1) (ஆ) BNSS படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

12). எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**<u>13) தீர்வு:–</u>**

வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும் வாட்ச்மேனாக பணிபுரிந்து வருவதாகவும், சுமார் 5 மாதங்களுக்கு முன்பு காலை 6:30 மணிக்கு எதிரி எஸ்டேட்டிற்குள் புல் அருக்க வந்ததாகவும், ஏன் இங்கு புல் அருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு

எதிரி அப்படிதாண்டா செய்யவேன் உன்னால் முடிந்ததை பார்த்துக்கோ என்று சொன்னதாகவும், அங்கிருந்த பிரதர் இடம் சொல்ல சென்ற போது ஆஜர் எதிரி கையால் இடது பக்கம் கன்னத்தில் அடித்ததாகவும், தான் மயங்கி கீழே விழுந்து விட்டதாகவும், அப்போது தனது கையில் இருந்த கத்தியை பிடுங்கி கழுத்தில் வெட்ட வந்ததாகவும், அதை தடுத்ததால் தனது இடது கையின் ஆட்காட்டி விரலில் வெட்டியதாகவும், தனது கையில் இரத்தம் வந்ததால் பிரதர் தன்னை ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கிருந்து மருத்துவர்கள் தன்னை மேல் செய்வதற்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போலீசார் தன்னை ஏற்காடு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டதாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடைய தான் என்று சாட்சியமளித்துள்ளார்.

13.1). தனது குறுக்கு விசாரணையில், **"எதிரியை தெரியுமா என்றால் பக்கத்து வீடு அதனால் தெரியும் என்றும், வழக்கில் தான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேனா என்றால் ஆமாம் என்றும், வழக்கினை திரும்ப பெற்றுக் கொள்கிறீர்களா என்றால் பெற்றுக் கொள்கிறேன்"** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13.2). அ.சா.1–ன் சாட்சியத்தினை ஆராய்கையில், வழக்குச் சம்பவம் குறித்து அ.சா.1 மற்றும் எதிரி சமாதானமாக சென்று விட்டார்கள் என்பது தெரிய வருகின்றது.

14). அ.சா.2 தனது சாட்சியத்தில் ஐந்து, ஆறு மாதங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 07.00 மணிக்கு எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்றதாகவும், அப்போது அ.சா.2 குப்புசாமி இடது கையில் இரத்தம் வழிந்தபடி அங்கிருந்து பங்களாவிற்கு வந்ததாகவும், என்ன நடந்தது என்று கேட்டதற்கு எதிரி கையில் வெட்டி விட்டதாக தன்னிடம் சொன்னதாகவும், பின்னர் அவர் ஏற்காடு அரசு மருத்துவமனையில் தானும், அருண்பால், சுந்தரம் என்பவரும் அ.சா.1–ஐ சிகிச்சைக்காக சேர்த்ததாகவும் பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

15). பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் அ.சா.3 மற்றும் அ.சா.4 அரசு தரப்பிற்கு பாதகமாக சாட்சியளித்ததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளனர். எனவே அவர்களின் சாட்சி ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16). வழக்கில் காயம்பட்ட அ.சா.1–க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனது சாட்சியத்தில் 14.03.2025–ம் தேதியன்று காலை 07.45 மணிக்கு

அ.சா.1–க்கு சிகிச்சைக்கு வந்ததாகவும், தன்னை தெரிந்த ஒரு நபர் கத்தியால் வெட்டியதாக கூறியதாகவும், அவரை பரிசோதனை செய்த போது இடது கையில் ஆள்காட்டி விரலிலும், நடுவர்களிலும் ஆழமாக வெட்டுக்காயம் மற்றும் இரத்தக் கசிவு இருந்ததாகவும், ரத்தக்கசிவிற்கும் முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்ததாகவும், மேல் சிகிச்சையில் அவருக்கு வழங்கிய கருத்துறை படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று அளிக்கப்பட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றானது அ.சா.6– ஆக குறியீடு செய்யப்பட்டது.

16.1). அ.சா.5 சாட்சியத்தினை ஆராய்கையில் அ.சா.1–க்கு சிகிச்சை அளித்தது குறித்தும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தும் புகாரிலுள்ள காயங்களை ஒத்துரைத்து அமைந்துள்ளதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதி அ.சா.5–ன் சாட்சியத்தினை ஏற்றுக்கொள்கிறது.

17). வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 தனது சாட்சியத்தில் அ.சா.1–ஐ விசாரணை செய்து வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சம்பவ இட சாட்சிள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார்

செய்ததாகவும், சம்பவ இடத்தில் கொடுவாள் ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும், காயமடைந்த நபரை பரிசோதனை செய்த மருத்துவர் வழங்கிய சான்றின் அடிப்படையில் சட்ட பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்ததாகவும் பின்னர் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

17.1). அ.சா.6–ன் சாட்சியத்தினை ஆராய்கையில் வழக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்து, கைப்பற்றுதல் மகஜர் மூலம் வழக்கு சொத்து என கைப்பற்றி பின்னர் பரிசோதனை செய்து மருத்துவர் அறிக்கைப்படி சட்டப்பிரிவு மாறுதல் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அளித்துள்ள சாட்சியமானது புலன் விசாரணை குறித்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

17.2). அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டார் என்பதை கவனத்தில் கொள்கையில், மாண்புமிகு உச்சநீதிமன்றமானது **Central Bureau of Investigation Vs Sadhu Ram Singh in** [(2017)1 **MLJ Crl** 724 **SC**] **Continuance of Criminal Proceedings, after compromise has been arrived between**

**complainant and accused, would amount to abuse of process of court and exercise in futility – Trial would be prolonged and it may end in decision which may be of no consequences to any parties** – Appeal dismissed என்ற வழக்கில் கூறி கூற்றினை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

18). எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆரய்ந்து பார்க்கும் பொழுது இவ்வழக்கின் சம்பவம் குறித்து புகார்தாரரும், எதிரிகளும் சமாதானமாக செல்வதால் இவ்வழக்கினை மேல நடத்துவதால் அரசு தரப்பு வழக்கிற்கு யாதொரு பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19). முடிவாக, எதிரியின் மீது ச/பி 329 (3), 296(b), 351 (3), 118 (2) BNS–ன் கீழ் அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால், எதிரி குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து **பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 271(1)–ன் கீழ்** எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 27–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–.இரா.இளஞ்செழியன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

**அ.சா.1** – திரு. **குப்புசாமி**

**அ.சா.2** – திரு. **சரண்ராஜ்**

**அ.சா.3** – திரு. **பழனி**

**அ.சா.4** – திரு. **ரவி**

**அ.சா.5** – திரு. **மேகலா**

**அ.சா.6** – திரு. **முருகன்**

**Judicial Form No:68**

| S.No of the exhibit | Description of the exhibits | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | 08.09.2025 | அ.சா.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் | 08.09.2025 | அ.சா.3 | அரசு தரப்பு | அசல் |
| 3. | பார்வை மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் | 08.09.2025 | அ.சா.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் | 08.09.2025 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் | 08.09.2025 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 6. | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | 12.03.2026 | அ.சா.5 | அரசு தரப்பு | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | முதல் தகவல் அறிக்கை | 11.05.2026 | அ.சா.6 | அரசு தரப்பு | அசல் |
| 8. | மாதிரி வரைப்படம் | 11.05.2026 | அ.சா.6 | அரசு தரப்பு | அசல் |
| 9. | பார்வை மகஜர் | 11.05.2026 | அ.சா.6 | அரசு தரப்பு | அசல் |
| 10. | கைப்பற்றுதல் மகஜர் | 11.05.2026 | அ.சா.6 | அரசு தரப்பு | அசல் |
| 11. | படிவம் 91 | 11.05.2026 | அ.சா.6 | அரசு தரப்பு | அசல் |
| 12. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 11.05.2026 | அ.சா.6 | அரசு தரப்பு | அசல் |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** **...இல்லை.**

**அரசு தரப்பில் சான்றுபொருட்கள்**

**1. அ.சா.பொ.1 – C.P. No. 11/2025 (கத்தி).**

**ஓம்/–.இரா.இளஞ்செழியன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**குறிப்பு–**

1. தீர்ப்பு பற்றிய விபரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.